செ.வெ.எண் 12 **பத்திரிகை செய்தி வெளியீடு** நாள் 06.01.2011

7.1.2011 அன்றுமுதல் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவையின் 15–வது கூட்டத் தொடரின்போது, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பத்திரிகையாளர்கள், பொது மக்கள் ஆகியோர் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள புதிய சட்டப் பேரவை வளாகத்தில் அனுமதியுடன் வருவதற்கும், சட்டப் பேரவை நடவடிக்கைகளை பார்வையிடுவதற்கும் பின்வரும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1) மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அரசு தலைமை கொறடா மற்றும் சட்டமன்ற கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் அண்ணா சாலை, <u>பெரியார் சிலைக்கு அருகில் உள்ள வாயில் வழியாக</u> சட்டப் பேரவக்கு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2) சட்டப் பேரவை உறுப்பினர்கள், அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள பத்திரிகையாளர்கள் ஆகியோர் <u>சிவானந்தா சாலையில் உள்ள வாயில் வழியாக</u> நுழைந்து ராஜாஜி மண்டபம் பின்புறத்திலுள்ள வாயிலின் வழியாக, சட்டப் பேரவை வளாகத்திற்குள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களது வாகனங்களை ராஜாஜி மண்டபம் பின்புறம் உள்ள இடத்தில் நிறுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டப் பேரவை உறுப்பினர்களின் வாகன அனுமதி அட்டையை செயலாளர் அறையிலும் உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலுள்ள இச்செயலக பிரிவுகளிலும் உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ளலாம். அரசு வழங்கிய வாகன அனுமதி அட்டையுடன் வருமாறு வாகனத்தில் வரும் பத்திரிகையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3) அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை உள்ள பத்திரிகையாளர்கள், அடையாள அட்டை பெற்றுள்ள பணியாளர்கள் மட்டுமே சட்டப் பேரவைச் செயலகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

4) சட்டப் பேரவை உறுப்பினர் குடியிருப்பு வளாகத்தில் தங்கி இருக்கும் உறுப்பினர்கள், <u>இந்தியன் வங்கி அருகேயுள்ள வாயில் வழியாக</u> சட்டப் பேரவைக்குள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

5) சட்டப் பேரவை நடவடிக்கைகளை பார்க்க வரும் பொதுமக்கள், அண்ணா சிலைக்கு அருகில் உள்ள வாலாஜா சாலை, சட்டமன்ற பொதுமக்கள் வளாக வாயில் வழியாக உள்ளே வர வேண்டும். அவர்களுக்கான நுழைவு அனுமதிச் சீட்டு, சட்டமன்ற பொதுமக்கள் வளாகத்தின் முன் வாயிலிலே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையுடன் பத்திரிகையாளர்கள் சட்டமன்ற பொதுமக்கள் வளாக வாயில் வழியாகவும் வரலாம்.

வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

ஒம்/- (மா. செல்வராஜ்)
செயலாளர்,
சட்டப் பேரவை